# விடியல்

## The Dawn

**மாத இதழ், பொழுது – 53**
**செப்டம்பர், 2013**
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



***சிறப்பாசிரியர்***
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

***ஆசிரியர்***
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

***இணை ஆசிரியர்***
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

***ஆசிரியர் குழு***
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்
அனைவரும்



***வெளியீடு:***

***தமிழ்த்துறை***

**கே.எஸ். ரங்கசாமி**
***கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)***
*திருச்செங்கோடு – 637 215,*
*தமிழ்நாடு, இந்தியா.*
*fb: facebook.com/ksrcasthamizh.vidiyal*
*Blog: ksrcasthamizh.blogspot.in*
*Email : vidiyalmagazhine@gmail.com*
*Website: ksrcas.edu*



© ***K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)***

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*


### இந்த இதழில்...

*இம்மாதத்தில்* ***'ஆசிரியர் தினம்'*** *சிறப்புற கொண்டாடப்படவுள்ளது. ஆசிரியர்களின் சிறப்புகள் குறித்த கவிதைகள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளன.*

*இம்மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு துறையைச் சார்ந்த மாணாக்கர்களின் படைப்புகளே விடியலில் இடம்பெறும்.*

*இந்த இதழில் உள்ள அனைத்து படைப்புகளையும்* ***கணிதத்துறை****யைச் சார்ந்த மாணாக்கர்கள் வழங்கியுள்ளனர். இந்த இதழ் உருவாக உதவிய கணிதத்துறைத் தலைவர்* ***திரு. தி. இராஜேந்திர குமார்*** *அவர்களுக்கும் கணிதத்துறைப் பேராசிரியர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் நன்றி.*

*அக்டோபர் மாத விடியல் இதழில்* ***வேதியியல் துறை****யைச் சார்ந்த மாணாக்கர்களின் படைப்புகள் இடம் பெறவுள்ளன. அதற்கு இசைவு தெரிவித்துள்ள வேதியியல் துறைத் தலைவர்* ***திரு. ஆர். சுப்பிரமணி*** *அவர்களுக்கும் அத்துறைப் பேராசிரியர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் நன்றி.*

*அனைத்து ஆசிரியர்களுக்கும் விடியலின் ஆசிரியர்தின நல் வாழ்த்துகள்.*

# உள்ளடக்கம்

## கட்டுரைகள்


| | |
|---|---|
| பாம்பின் விஷம் | 05 |
| சாத்துக்குடி | 12 |
| கணிதமேதை | 16 |
| ஆயுள் | 20 |
| மொழி | 22 |


## கவிதைகள்


| | |
|---|---|
| கனாக்காலங்கள் | 03 |
| வெற்றி எது? | 04 |
| ஏறு, முன்னேறு | 04 |
| மகிழ்ச்சி | 05 |
| ஆனந்தக் கண்ணீர் | 07 |
| வாழ்க்கைக் கணக்கு | 07 |
| புறப்படு தோழா | 08 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 09 |
| தாயைத்தேடி | 10 |
| தாய்ப்பாசம் | 10 |
| நட்பு | 14 |
| கணிதக் காதல் | 15 |
| நட்பு | 21 |
| தமிழ்த்தாய் | 21 |
| இமைகள் | 21 |
| ஆசிரியர் | 22 |
| என் ஆசிரியர் | 23 |
| அன்புத்தூரல் | 23 |
| கல்வி | 23 |
| தாய் | 23 |
| சுதந்திரம் | 24 |
| அழகு | 24 |
| என்ன செய்வீர்? | 24 |
| கண்ணீர் | 25 |
| நான் நேசித்தவை | 25 |
| கைகள் | 25 |
| நட்பு | 26 |
| என் தாய் | 26 |
| இயற்கைக் கல்வி | 26 |
| நட்சத்திர மீன் | 26 |
| முயற்சி | 27 |
| நண்பனே! | 27 |
| தாய்மை | 27 |
| தமிழ் | 28 |
| வாழ்க்கை | 28 |
| நட்பு | 28 |
| கண்ணகி | 29 |
| இயற்கை | 30 |
| பொய் | 30 |


## நிகழ்ச்சிகள்


| | |
|---|---|
| கல்விச்சுற்றுலா | 30 |
| கவிதைப் பயிற்சி | 31 |
| கவியரங்கம் | 31 |
| பட்டிமன்றம் | 31 |
| அறிவிப்புகள் | 32 |


இவ் இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துகளையும் அறிவுரைகளையும் எங்களுக்குத் தெரிவித்துதவவும் -ஆசிரியர்

*'ஆசிரியர் தினச் சிறப்புக் கவிதை*

# கனாக்காலங்கள்

*"முதல்முதலாய்ப் பள்ளியின்வாசலில்.*
*கண்களில் கண்ணீரோடு*
*நீர் ஆசையாய் என்னை*
*அள்ளி எடுத்து அரவணைத்தீர்.*

*அந்தக் கதகதப்பு, பாசம், நேசம்*
*இன்றும் இருக்கிறது*
*நெஞ்சினில் அழியாமல் - ஆதலால்*
*என் அம்மாவிற்கு இணையாய்*
*உம்மை வைத்தேன்.*

*அரும்பு வயதிலிருந்து*
*குறும்பு வயதிற்குத் தாவல்..*
*விடலைப் பருவம்*
*தவறுகளுக்குக் குறைவைக்கவில்லை.*
*முட்டிபோட வைத்துத் தண்டித்தீர்!*
*அந்த வலி இன்னும் இருக்கிறது.*
*தப்பு செய்யவிடாமல் தடுக்கிறது.*
*ஆதலால் உம்மை என்*
*அப்பாவிற்கு இணையாய் வைத்தேன்.*

*அரும்பு மீசை வயதில் ஏனோ*
*நீர் சொன்ன தெல்லாம் தப்பாகவே*
*தெரிந்தது அப்போது.*
*சின்னஞ்சிறு கூட்டுக்குள்ளிருந்து*
*உடைத்து வெளிவர*
*பரந்து விரிந்த உலகை*
*நீர் காட்டினீர்.*
*நாளைய இந்தியாவான எம்மை*
*தினம் தினம் நீர் செதுக்கையிலே*
*சிற்பியாய்த் தெரிகிறீர் நீர்.*

*தோல்வியில் நான் வீழ்ந்தபோது*
*தோளில் சாய்த்து*
*எனைத் தேற்றினீர்*
*அப்போது நீர் எமக்குத்*
*தோழனாய்த் தெரிந்தாய்.*

*எனதருமைக்குரியவர்களே!!*
*அவ்வப்போது நீங்கள்*
*என் தாயை நினைவு கூர்ந்தீர்கள்.*
*வகுப்புகளின் கடைசி இருக்கையில்*
*அமர்த்திப் பாடம் எனும் தாலாட்டில்*
*என்னை உறக்கத்தில்*
*ஆழ்த்தியபோது.*
*சட்டென இடிமுழக்கம்.*
*விழித்தால்தான் தெரிந்தது*
*என் எதிரே*
*அர்ச்சனைகளின் ஆரம்பமென.*

*தூர தேசத்திலோ,*
*எதிர்பாரா சந்திப்பிலோ*
*எங்கள் உயர்ந்த நிலைக்கண்டு*
*நல்ல குடிமக்களாய் எங்களை*
*நீங்கள் பார்க்கையில்தான்*
*உங்கள் கண்களில்*
*எத்தனை குதூகலம்!*

*குயவனிடம் களிமண்*
*பானையாகிறது -*
*உங்களிடம்*
*நாங்கள் மனிதர்களாகிறோம்.*
*'மாதா பிதா குரு தெய்வம்'*
*அர்த்தம் விளங்கவில்லை வெகுநாள்..*
*புரிந்தபோது தெரிந்தது -*
*மாத பிதா குரு மூவருமே தெய்வமென.*

*தாய் தந்தையர் தந்தது உயிர்*
*நீ தந்தது உணர்ச்சியல்லவா?*
*எங்களை மனிதர்களாக்கிய*
*மகான்களே!*
*நாங்கள் உங்களை*
*எப்போதும் வைப்போம்*
*மலர்கள் மீது."*

**ப. பிரியங்கா**
*இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## வெற்றி எது?

*"சாதனையின் முதல்படி தோல்வி*
*சோதனையின் இறுதிப்படி வெற்றி*
*கடமைக்குச் செய்தால் தோல்வி*
*கடமையைச் செய்தால் வெற்றி*
*பிறர் வெற்றிகளைத்*
*தோற்கடித்தால் தோல்வி*
*உன் தோல்விகளைத்*
*தோற்கடித்தால் வெற்றி*

**எம். நர்கீஸ் பாத்திமா**
*இளங்கலை கணிதம் முதலாண்டு 'ஆ'பிரிவு*

## ஏறு, முன்னேறு

*"உழைப்பைக் காதலித்துப் பார்*
*வாழ்க்கையின் உயரத்தை*
*அறிவாய்.*

*வறுமையைக் காதலித்துப் பார்*
*பணத்தின் மேன்மையை*
*அறிவாய்.*

*தோல்வியைக் காதலித்துப் பார்*
*வெற்றியின் பெருமையை அறிவாய்.*

*தோல்வி என்பது,*
*உன்னை எரிக்க வரும்*
*நெருப்புப்பந்து அல்ல -*
*நீ தூக்கிப் போட்டு*
*விளையாட வேண்டிய*
*கூடைப்பந்து.*

*வெற்றி என்னும் சருக்குமரத்தில்*
*சருக்காமல் ஏற*
*முயற்சியைப் படிக்கட்டாக்கு.*

*நீ முயற்சிப் படிக்கட்டில் ஏற ஏற*
*வெற்றி உன் விலாசம் தேடி*
*உன் வீட்டு வாசல் படிக்கட்டில்*
*ஏறி வரும் - உன்னை*
*ஏந்த வரும்."*

**ப. டிரினிடா**
*இளங்கலை கணிதம் முதலாண்டு*
*'இ' பிரிவு*

## கரண்டி அளவுகள்

*1 தேக்கரண்டி - 4 மி.லி*

*1 குப்பி - 175 தேக்கரண்டி ( 700மி.லி)*

*1 தீர்த்தக்கரண்டி - 1.33 மி.லி*

*1 நெய்க்கரண்டி - தேக்கரண்டி (4.0 மி.லி)*

*1 உச்சிக்கரண்டி - 4 தேக்கரண்டி (16 மி.லி)*

*1 மேசைக்கரண்டி - 4 தேக்கரண்டி (16 மி.லி)*

*1 பாலாடை - 30 மி.லி*

*1 எண்ணெய்க்கரண்டி - 8 பாலாடை (240 மி.லி)*

**ப. பிரியங்கா**
*இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## மகிழ்ச்சி

*"நூறு வருடங்கள் வாழும்*
*மனிதன் அழுது கொண்டே*
*பிறக்கிறான்.*
*சிலமணி நேரம் மட்டுமே வாழும்*
*பூக்கள் சிரித்துக் கொண்டு*
*பிறக்கின்றன."*

**ப. பிரியங்கா**
*இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## பாம்பின் விஷம்

**மோ. நந்தினி**
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'அ' பிரிவு*

*பாம்பின் விஷம் தண்ணீர் போல இருக்காது. பசை மாதிரி ஒட்டும் தன்மை கொண்ட திரவமாகும். அது பச்சையும் மஞ்சளும் கலந்த மாதிரியான நிறம் உடையது. சுவை அற்றது. இதில் அடங்கியுள்ள விஷங்களின் ரசாயனப் பெயர்கள் : வைரயால், புரோடஸ், பாஸ்படேசஸ், இன்ரா. இவைதவிர துத்தநாகம் கந்தகம் போன்ற உலோகங்களும் அடங்கி உள்ளன.*

*கருநாகத்தின் நஞ்சானது மிகவும் கொடியது. பாம்பு தன் ஒரே கடியில் மனிதனைக் கொல்ல வல்லது. இது கடித்த சில நிமிடங்களிலேயே மனிதன் நினைவிழந்து, மரணத்தைத் தழுவி விடுவான். ஆசிய யானை களும் இது கடித்த 3 மணி நேரத்தில் இறந்து விடும். இதன் நஞ்சானது ஆப்பிரிக்க நாட்டுக் கறுப்பு மாம்பா பாம்புகளைவிட 5 மடங்கு அதிகமானது.*

*உண்மையில் இதன் நஞ்சானது குறைந்த அளவு நச்சுத் தன்மையே கொண்டதுதான். ஆனால், இவ்வகை*

*கருநாகங்கள் ஒரு முறை எதிரியைக் கடிக்கும் பொழுது, ஏறத்தாழ 6 முதல் 7 மில்லி அளவு நஞ்சை அதன் உடலில் செலுத்த வல்லன. இதன் காரணமாகவே இதன் எதிரிகள் உடனடியாக மரணத்தைத் தழுவு கின்றனர்.*

*இதன் நஞ்சை முறிக்க இதுவரை இரண்டு மருந்துகளே கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. முதலாவது தாய்லாந்து நாட்டில் இயங்கும் செஞ்சிலுவை சங்கம் கண்டுபிடித்தது. மற்றது இந்திய மத்திய ஆராய்ச்சி மையம் கண்டுபிடித்தது. ஆனால், இவை இரண்டும் பரவலாகக் கிடைக்காத காரணத்தால், இதன் கடி பட்ட பலர் இறந்து விடுகின்றனர்.*

*பொதுவாக எல்லா விஷப் பிராணி மற்றும் ஜந்துக்களுக்கும் விஷத்தை உற்பத்தி செய்யும் பிரத்யேகச் சுரப்பி அமைந்துள்ளதைப் போன்றே நல்லப் பாம்புக்கும் அதன் தலைப்பகுதியில் விஷச்சுரப்பி அமைந்துள்ளது. இதன் வாயின் மேற்பரப்பில் இதன் விஷப்பை (venom sac) அமைந்துள்ளது. இந்த விஷப்பையுடன் இணைந்த குழாய் (venom duct) உட்புறம் முற்றிலும் துளையுடைய முன்புற பற்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த முன்புறப் பற்களின் முனை மிகக் கூர்மையாகவும் துளையுடையதாகவும் அமைந்துள்ளது.*

*பாம்புகள் தங்களின் எதிரிக்குக் காயத்தை ஏற்படுத்துவதற்காகவே தீண்டுகிறது. அதன் பின்னர் வாயின் உட்புறம் அமைந்த கடைவாய்ப் பற்களைக் கொண்டு அதன் மேற்புறத்தில் அமைந்த விஷப்பையை அழுத்துவதன் மூலம் வெளியேறும் விஷம் அதனுடன் இணைக்கப் பட்ட குழாய் மூலம் வெளியேறி துளையுடைய முன்பற்களை அடைகின்றது. அப் பொழுது தீண்டியதால் ஏற்பட்ட காயத்தின் மூலம் விஷம் இரத்த ஓட்டத்தில் கலந்தவுடன் முதலில் மத்திய நரம்பு மண்டலத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இது தீண்டியவுடன் பொதுவாக மரண பயம் ஏற்பட்டு விடுவதனால் இதயம் மிக வேகமாகத் துடிக்க ஆரம்பிக்கின்றது. இதன் மூலமும் இரத்தம் விரைவுப் படுத்தப்பட்டு விரைவாக விஷம் உடல் முழுவதும் பரவி ஆபத்தையும் விரைவு படுத்துகின்றது.*

*பாம்பின் விஷம் செரிந்த புரோட்டீன்களினால் (highly protin) ஆன பொருளாகும். இது நியூக்ரோ டாக்ஸிஸ் என்று அழைக்கப் படுகின்றது. புரதம் என்ற ஒரு சத்துப் பொருள் மனிதன் உயிர்வாழ மிகவும் அத்தியாவசியமான*

ஒன்றாகும். நாம் உண்ணக்கூடிய மாமிசம் மற்றும் தாவர எண்ணெய் போன்றவற்றில் புரதங்கள் அடங்கியுள்ளன. இருப்பினும் நம் உடல் அமைப்பைப் பொருத்தவரை புரதமோ, வைட்டமின்களோ அல்லது தாதுப் பெருள்களோ நம் வாயின் மூலம் உட்கொள்ளப்பட்டு வயிற்றில் செரிமானம் செய்யப்பட்டு நம் உடலுக்குத் தேவையான மற்றொரு பொருளாக மாற்றப்பட்டு (metabolism) தேவையற்றவை அகற்றப்பட்டு அதன் பின்னர்தான் இரத்தில் கலக்க இயலும். ஆனால், பாம்பு கடிப்பதனால் விஷம் (highly protin) இரத்தத்தில் நேரடியாகக் கலப்பதனாலும் நம் உடலின் இயல்பிற்கு மாற்றமாக இருப்பதனாலும் நம் உடலின் திசுக்களும் கல்லீரலும் நரம்பு மண்டலங்களும் பாதிப்படைந்து மரணத்திற்கு வழி வகுக்கின்றது.

பாம்பின் விஷம் பாம்பு கடிக்கான மருந்து தயாரிப்பிலும் (anti venom) வலி நிவாரணம், மூட்டுதசை மற்றும் புற்று நோய்க்கான மருத்துவத்திலும் பயன் படுத்தப்படுகின்றது. முட்டையிலிருந்து வெளிவந்த சிறிய பாம்புடைய விஷம் வீரியம் மிக்கப் பெரிய பாம்பின் விஷத்தைப் போன்றே எந்த விதத்திலும் குறையாத வீரியம் மிக்கது.

## ஆனந்தக் கண்ணீர்

"கருவறை உறவு
கருவறையில் சுமந்து
அறுசுவை உணவை மறந்து
உறக்கத்தைத் துறந்து
உயிர் கொடுத்த தாயே!
என் முதல் காதலியே!
என் உயிர்த் தோழியே!
பத்துமாதம்
பாசமாகத் தாங்கிய
கருவறைக்கு நான்
தரும் வாடகை
உன் கண்ணில்
ஆனந்தக் கண்ணீர்
மட்டுமே!"

**செ. மேனகா**
இளங்கலை கணிதம் முதலாண்டு
'இ' பிரிவு

## வாழ்க்கைக் கணக்கு

"கழி உன் எதிரிகளை.
வகு உன் துன்பங்களை.
பெருக்கு உன் இன்பங்களை.
கூட்டு உன் சொந்தங்களை."

**ர.சி. ஹிண்டுமதி**
இளங்கலை கணிதம் முதலாமாண்டு
'இ' பிரிவு

## புறப்படு தோழா

"புறப்படு தோழா புயலென.
தோல்வியின் முடிவு மரணம்,
வாழ்க்கையின் இறுதி மரணம்
என்று எண்ணி
நெஞ்சம் விம்மி
இருட்டில் ஒளிந்திருக்கும்
தோழா! வெளியே வா.
வேதனைகளை விலக்கிவிட்டு
கண்களும் மனமும்
ஒருசேர பார்க்கும் பாதையில்
புறப்பட்டு வா!
காத்திருக்கிறது
உனக்காகவே உருவான
ஓர் உலகம்.
உந்தன் இன்பத்திற்காகவே
இறைவன் இயற்கையைப்
படைத்திருக்கிறான்.
ஆம் தோழா!
நீ அழகு - நிந்தன்
உடல் அழகு.
உடம்பில் உயிர் அழகு.
இதயத்தை ஆளும் மனம் அழகு.
மனத்தின் கற்பனைகள் அழகு.
கற்பனையின் கவிதைகள் அழகு.
பார்க்கும் கண்கள் அழகு.
நீ நிற்கும் இடம் அழகு.
நீ திரும்பும் திசையாவும் அழகு.
இந்தப் பூமி அழகு.
பூமியின் புவியீர்ப்பு அழகு.
கண்ணாமூச்சு ஆடும்
காற்று அழகு.
கருநீல வானம் அழகு.
மழைநீர் மேகமாய்
மிதப்பது அழகு.
கொட்டும் மழை அழகு.
மழை நின்றதும்
சின்னத் தூரல்கள் அழகு.
தூரல்களை அழகாக்கும்
வானவில் அழகு.
சூரியன் கண்மூட
சந்திரன் அழகு.
சந்திரனை அழகாக்கும்
இரவு அழகு.
இரவின் தோழி தென்றல் அழகு.
இளந்தென்றல் போல் சின்னக்
குழந்தை அழகு.
குழந்தையின் அழுகை ஓர் அழகு.
அழுகையை அடக்கும்
சிரிப்பு அழகு.
தத்தித் தவழ்வது ஓர் அழகு.
சின்னப் பாதங்களில்
சிங்கார நடை அழகு.
சிவந்த வாய்தனில்
மழலை மொழி அழகு.
பள்ளிப் பருவத்தில் வரும்
பயம் அழகு.
படிக்கும் வயதில் நண்பர்கள் அழகு.
நண்பர்களோடு இருக்கும்
நாட்கள் அழகு.

*கல்லூரிப் பருவத்தில் இளமை அழகு.*
*உடைந்த கண்ணாடியும் அழகு.*
*அதில் தெரியும் சிறு உலகமும் அழகு.*
*எப்போதும் சிரிக்கும் கடல் அழகு.*
*கடலின் ஆழம் அழகு.*
*அதன் அலைகள் அழகு.*
*கடலும் கரையும் கொண்ட நட்பு அழகு.*
*எட்டாத வானமும் பூமியும்*
*தொலைதூரத்தில்*
*தொட்டுக் கொள்வது அழகு.*
*விஞ்ஞான வளர்ச்சி அழகு.*
*வித்தியாசமான மனிதர்கள் அழகு.*
*அவர்களின் அறிமுகம் அழகு.*
*அறிமுகத்தால் மலரும் நட்பு அழகு.*
*நட்பில் இணைந்த இதயங்கள் அழகு.*
*இப்படிச் சொல்ல சொல்லத்*
*தீராத இன்பங்கள்*
*உன்னைச் சுற்றி -*
*நீ ஏன் அழவேண்டும்*
*துன்பத்தைப் பற்றி?*
*வா தோழா! எழுந்து வா!*
*உன் கருப்பு தினங்களை*
*வண்ணமாக்கப்*
*புயலென புறப்பட்டு வா!*
*உன் காலடிகளும் நாளை*
*வரலாற்றுச் சுவடுகளாய் மாறும்*
*காலம் வரும்."*

***ப. சுகன்யா***
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## வாழ்க்கை வாழ்வதற்கே

*"வாழ்க்கை ஒரு சவால் - அதனைச் சந்தியுங்கள்.*
*வாழ்க்கை ஒரு பரிசு – அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்.*
*வாழ்க்கை ஒரு பயணம் - அதனை மேற்கொள்ளுங்கள்.*
*வாழ்க்கை ஒரு சோகம் - அதனைக் கடந்து வாருங்கள்.*
*வாழ்க்கை ஒரு துயரம் - அதனைத் தாங்கிக்கொள்ளுங்கள்.*
*வாழ்க்கை ஒரு கடமை - அதனை நிறைவேற்றுங்கள்.*
*வாழ்க்கை ஓர் இரகசியம் - அதனைக் கண்டறியுங்கள்.*
*வாழ்க்கை ஒரு பாடல் - அதனைப் பாடுங்கள்.*
*வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - அதனைப் பயன்படுத்துங்கள்.*
*வாழ்க்கை ஓர் உறுதிமொழி – அதனை நினைவில் ஏற்றுங்கள்.*
*வாழ்க்கை ஓர் இலக்கு – அதனை அடைந்துவிடுங்கள்."*

***ப. பிரியங்கா***
*இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## படித்ததில் பிடித்தது

- *நீ விழுந்து கிடந்தால் நிழல் கூடத் துணையில்லை. எழுந்து நடந்தால் மலை கூடத் தடையில்லை.*
- *எப்போது நீ ஓர் உயிர் மீது அளவுக்கதிகமாக அன்பு செலுத்து கிறாயோ அந்த நொடி முதல் நீ மனத்தளவில் பலவீனம் அடைகிறாய்.*
- *உறங்கும் போது வருவதல்ல கனவு - உன்னை உறங்கவிடாமல் செய்வதே கனவு.*
- *நீ வரும் பாதை சுமையானது என்றால் அதில் வரும் பயன் சுகமானது.*
- *பிறப்பு சம்பவமாயினும் இறப்பு சரித்திரம் எய்தட்டும்.*
- *எந்தக் குற்றங்களையும் மன்னிக்கும் நீதிமன்றம் தாயின் கருவறை.*
- *சூழ்நிலையைக் காரணம் காட்டாதே! அதை நீ உனக்குச் சாதகமாக உருவாக்கு.*

***கா. கவிதா***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'இ' பிரிவு*

## தாயைத் தேடி

*"காற்றடித்த வேகத்தில்*
*என்னை வந்தடைந்த*
*ஆருயிரே!*
*சூட்சமங்கள் ஏதுமின்றி*
*என்னைக் காத்து வரும்*
*தேவதையே!*

*கண்டதில்லை அன்னையின் முகம்*
*காண வைத்தாய் தோழியே*
*உன் முகத்தில்.*
*ஆசைகள் பலவுண்டு*
*பேராசையில் இது ஒன்று*
*வாரிக் கொடுக்கும்*
*உன் கரம் எங்கே?*
*நாடி வரும் என் சிரம் அங்கே.*

*அன்னையின் உருவில் வந்த*
*தோழியா?*
*தோழியின் உருவில் வந்த*
*அன்னையா?*
*இனம்புரியா ஓர் அன்பு."*

***பா. ஹேமலதா***
*இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## அறிவுத் துளிகள்

- இந்தியாவின் முதல் பெண்கள் காவல் நிலையம் கேரள மாநிலம் கோழிக்கோட்டில் தொடங்கப்பட்டது.
- பேக்ஸ் இயந்திரம் பெய்ன் என்ற விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப் பட்டது.
- உலகில் அதிக டி.வி. நிலையங்கள் உள்ள நாடு அமெரிக்கா.

**மோ. நந்தினி**
இளங்கலை கணிதம் முதலாமாண்டு
'அ' பிரிவு

- விதியானது ஒரு கதவை மூடும்போது நம்பிக்கையானது பல கதவுகளைத் திறக்கும்.
- அனுபவம் ஒரு நல்ல பள்ளிக்கூடம். ஆனால், அறிவற்றவர்கள் அதில் கற்றுக்கொள்வதில்லை.
- உன்னைப் பார்த்துப் பிறர் பொறாமைப்படுகிறார்கள் எனில் நீ வளர்ந்து வருகிறாய் என்று நினைத்துக்கொள்.

**மோ. நந்தினி**
இளங்கலை கணிதம் முதலாமாண்டு
'அ' பிரிவு

## சிந்தனைச் சுடர்கள்

- மரியாதையாகப் பேசுவதும் நடப்பதும் செலவில்லாத செல்வங்கள்.
- வாழ்க்கையில் எதிர்ப்படும் துன்பங்களை எதிர்கொள்வதற்கு நண்பர்களே உற்ற துணையாவர்.
- விருப்பங்கள் அரை மடங்கு அதிகமானால் சங்கடங்கள் இரு மடங்காகும்.
- ஏடுகளில் உள்ள கடுஞ்சொற்கள் அறிவை வளர்க்கும். பெரியோர்களின் கடுஞ்சொற்கள் நல்வாழ்வைப் பெருக்கும்.

## தாய்ப்பாசம்

"நிலை மாறும் உலகில்
தாயின் அன்பே நிலையானது.
என் உயிரின் சுவாசம்
என் தாயிக்குத் தெரியும்.
நான் கருவுற்ற நாள் முதலே
கவலைகளை மெய்மறந்து
கனவுகளுடன் என்னைச் சுமந்து,
என்னைக் காப்பாற்றி
என்னை ஈன்றெடுத்த தாயே
என் திருக்கோவில் நீயே!

**டி. கௌதமி**
இளங்கலை கணிதம் முதலாமாண்டு
'ஆ' பிரிவு

# சாதனைக்கு வயதில்லை

***முதுமையிலும் சாதனை***

- *கொலம்பஸ் உலகைச் சுற்றிய போது அவரது வயது 56*
- *டாக்டரான சர் பிரான்சிஸ் ஹைடேன் தலைசிறந்த ஓவியரான போது அவரது வயது 86*
- *புகழ்பெற்ற 'பாஸ்ட்' என்ற நூலை எழுதிய கெத்தேவின் வயது 83.*
- *கிளாஸ்டன் பிரதமரானபோது அவரின் வயது 83.*
- *லியானார்டோடாவின்சி ஓவியரான போது அவரின் வயது 77.*

***இளவயது மேதைகள்***

- *1,300வரிகள் கொண்ட ஆங்கிலக் கவிதையை இயற்றியபோது சரோஜினி நாயுடுவுக்கு வயது 13.*
- *எதிரியின் கோட்டையைக் கைப்பற்றியபோது சிவாஜிக்கு வயது 13.*
- *ஷேக்ஸ்பியரின் மாக்பெத் நாடகத்தை வங்க மொழியில் மொழிபெயர்த்தபோது ரவீந்திரநாத் தாகூரின் வயது 14.*
- *பல அறிஞர்களை வாதத்தில் வென்றபோது ஆதிசங்கரரின் வயது 16.*

***தொகுப்பு: செ. மேனகா***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'இ' பிரிவு*

# சாத்துக்குடி

***மோ. நந்தினி***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'அ' பிரிவு*

*சிட்ரஸ் இனப் பழங்களில் ஒன்றான சாத்துக்குடி தோற்றத்திலும் சுவையிலும் ஆரஞ்சு பழத்தை ஒத்திருக்கும் ஆனால், அளவில் ஆரஞ்சைவிடச் சற்றுச் சிறியது.*

*இது சீனாவைத் தாயகமாகக் கொண்டது. அதனால், இது சீனத்து ஆரஞ்சு என்ற பெயரில் உலக நாடுகளால் அழைக்கப்படுகிறது.*

*சாத்துக்குடியில் பல வகைகள் உள்ளன. அவை நற்சுவை தருவதிலும் அதிக சாறு தருவதிலும் வேறுபட்டு இருக்கின்றன.*

*சாத்துக்குடியின் அறிவியல் பெயர் சிட்ரஸ் ரெடிகுலடா என்பதாகும். சாத்துக்குடி உடலுக்குக் குறைந்த ஆற்றல் வழங்கக் கூடியது.*

*100கிராம் பழத்தில் 53 கலோரி ஆற்றல் கிடைக்கிறது. பல்வேறு நோய் எதிர்ப்புப் பொருள்கள் சாத்துக்குடியில் உள்ளன.*

*நாரின் ஜெனின், நாரின் ஜின், ஹெஸ்பர்டின், வைட்டமின் ஏ, கரோட்டீன்ஸ், ஸான்தின்ஸ், லுட்டின் போன்றவை குறிப்பிடத்தக்கன. ஆரஞ்சு பழத்தைவிட அதிக நோய் எதிர்ப்புப் பொருள் சாத்துக்குடியில் உள்ளது.*

***நோயுற்றவர்களுக்கு***

*நோயால் பாதிக்கப்பட்டு உடல் இளைத்தவர்கள் சாத்துக்குடிச் சாற்றைப் பருகி வந்தால் உடலுக்குப் புத்துணர்ச்சி உண்டாகும். உடலுக்கு வலு கொடுக்கும். சாத்துகுடியானது இரத்தத்தில் எளிதில் கலப்பதால் உடல் வெகு விரைவில் தேறும்.*

*ஒவ்வொருவருடைய வளர்ச்சிக்கும் அவர்களுடைய நினைவாற்றலே முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே நினைவாற்றலை அதிகரிக்க சாத்துக்குடிப் பழம் சாப்பிடுவது நல்லது.*

***இரத்த விருத்திக்கு***

*சிலர் எப்போதும் சோர்வாகவே இருப்பார்கள். சிறிது வேலை செய்தாலும், அதிகமாக அசதி உண்டாவதாகக் கூறுவார்கள். கை, கால் மூட்டுக்களில் வலி உண்டாகும். சில சமயங்களில் தலைச் சுற்றலுடன் இலேசான மயக்கம் ஏற்படும்.*

*இவர்களுக்குத் தினமும் இரண்டு சாத்துக்குடியின் சாற்றைப் பருகி வந்தால் இரத்தம் விருத்தியாகும். உடல் அசதி நீங்கும்.*

*இரத்தத்தில் சிவப்பணுக்களின் (ஹீமோ குளோபின்) எண்ணிக்கை குறைவதால் இரத்தச் சோகை ஏற்பட வாய்ப்புள்ளது. நமது நாட்டில் இரத்தச் சோகையால் 67 சதவிகிதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த இரத்தச் சோகையை நீக்குவதற்குச் சாத்துக்குடி நல்ல மருந்தாகும்.*

***எலும்புகள் வலுவடைய***

*சிலருக்கு இலேசாக அடிபட்டால் கூட எலும்புகள் உடைந்துவிடும். மேலும் எலும்புகள் வலுவற்று காணப்படும். இதற்குக் காரணம் கால்சியச் சத்து குறைபாடே ஆகும். இவர்கள் அதிக அளவில் சாத்துக்குடியை உண்டு வந்தால் எலும்புகள் வலுவடையும்.*

***மலச்சிக்கல் தீர***

*மலச்சிக்கல்தான் அனைத்து நோய்களுக்கும் மூலகாரணம். மலச்சிக்கல் உள்ளவர்கள் தினமும்*

ஒரு பழம் வீதம் உண்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.

### நன்கு பசியைத் தூண்ட

பசியில்லாமல் சிலர் அவதி யுறுவார்கள். இவர்களின் வயிறு எப்போதும் நிரம்பி உள்ளது போல் தோன்றும். சாத்துக்குடி பழத்தைத் தினமும் உண்டு வந்தால் அது சீரண சக்தியைத் தூண்டி, நன்கு பசியை உண்டாக்கும்.

### முதியோர்களுக்கு

வயது முதிர்ந்தவர்களுக்கு உணவு சரியாகச் செரிக்காமல் மலச்சிக்கல் உண்டாகும். இதனால் உடல் அசதி, சோர்வு உண்டாகும். இவற்றை நீங்க சாத்துக்குடி நல்ல மருந்தாகும்.

### குழந்தைகளுக்கு

குழந்தைகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது கால்சியம் சத்து தான். ஒரு வயதுக்குமேல் உள்ள குழந்தைகளுக்கு கால்சியச் சத்து அதிகம் தேவை. சாத்துக்குடியில் அதிகளவு கால்சியச் சத்து இருப்பதால் குழந்தைகளுக்குச் சாத்துக்குடி சாறு கொடுப்பது மிகவும் நல்லது.

### பெண்களுக்கு

நாற்பது வயதைக் கடந்த பெண்களுக்கு எலும்புகள், எலும்பு மூட்டுகள் தேய்மானம் அடையும். மேலும் மாதவிலக்கு நிற்கும் காலமான (40-45 வயதுகள்) மெனோபாஸ் காலங்களில் பெண்களுக்குச் சத்துக் குறைவால் பல இன்னல்கள் உண்டாகும். இந்தக் குறை நீங்குவதற்குப் பெண்கள் தினமும் சாத்துக்குடியின் சாற்றினை அருந்துவது நல்லது.

## நட்பு

"ஆயிரம் கோடி
நட்சத்திரங்கள் இருந்தாலும்
விண்ணிற்கு அழகு
நிலாதான்.
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
மனிதற்கு அழகு நட்புதான்.
நட்பு என்பது பூந்தோட்டம்
அதில் பல பூக்கள் இருக்கும்
அதில் ஒரு பூ வாடினாலும்
எல்லாப் பூக்களும் வாடிவிடும்.
ஏழேழு ஜென்மங்கள்
எடுத்தாலும் எடுப்பேன் - நீ
என் நண்பனாக இருந்தால் மட்டும்.
இறந்தாலும் இறப்பேன் - நீ
என்னை மறந்தால் மட்டும்."

**ர.சி. ஹிண்டுமதி**
இளங்கலை கணிதம் முதலாமாண்டு
'இ' பிரிவு

## விடுகதைகள்

*கடுங்கோடையிலும் துணைக்கு வருவான். கொட்டும் மழையிலும் துணைக்கு வருவான் அவன் யார்?*

***குடை***

*அழகுக்கும் உதவும் ஆபத்துக்கும் உதவும் அவன் யார்?*

***பொன்நகை***

*நுனி அடிக்கும் கனி உதிர்க்கும் கவ்வும் நாய் விரட்டும் அது என்ன?*

***கைத்தடி***

***மோ. நந்தினி***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'அ' பிரிவு*

## பேச்சுக்கள் பலவிதம்

*கிரிக்கெட் வீரர் - 'ஓவரா' பேசுவார்*

*போட்டோகிராப்பர்- 'டெவலப்' பண்ணிப் பேசுவார்*

*ரவுடி – 'அடிச்சுப்' பேசுவார்*

*ஹோட்டல் சர்வர் - 'சூப்'பரா பேசுவார்*

*வழக்குரைஞர் - 'மெய்' மறந்து பேசுவார்*

*ஹோட்டல் மாஸ்டர் - 'கார சாரமாகப்' பேசுவார்*

*பூக்கடைக்காரர்-வார்த்தையை 'அளந்து' பேசுவார்.*

***பி. காயத்ரி***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## விந்தை

| | | | | |
|---|---|---|---|---|
| | 720 | 720 | 720 | |
| 720 | **243** | **236** | **241** | 720 |
| 720 | **238** | **240** | **242** | 720 |
| 720 | **239** | **244** | **234** | 720 |
| | 720 | 720 | 720 | |

***பி. காயத்ரி***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## கணிதக் காதல்

*"அழகின் வடிவமாய் Geometry*
*வரவுக்கேற்ற செலவுக்கு Arithmetic*
*எல்லையற்ற அன்பினால் Infinity*
*வாழ்விற்குத் திசைகாட்டியாய் Vector*
*Variables -க்குப் பாலமாய் Algebra*
*அறிவியலைத் தத்தெடுத்து*
*வளர்க்கும் கணிதமே!*
*நீ ஒரு பெண்ணாக இருந்தால்*
*நான் உன்னையே மணப்பேன்"*

***எம். கங்கா***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'ஆ' பிரிவு*

### *Maths is fun*

*Do this Multiplication and see the result*

*<Your age > x 13837 x 73 = ?*

*உங்கள் வயது 28 எனில்*

*28 x 13837 x 73 = 2828282828*

*M. Gunga, I B.Sc. Maths – B*

# கணித மேதை

**கோ. பிரியதர்ஷினி**
இளங்கலை கணிதம் முதலாமாண்டு
'இ' பிரிவு



'கணித மேதை' எனப் போற்றப்படும் இராமானுஜம் ஈரோட்டில் வாழ்ந்து வந்த சீனிவாசன் - கோமளம் இணையருக்கு 22.12.1887 இல் பிறந்தார். இவர் மூன்றாண்டு வரை பேசும் திறனற்றவராக இருந்தார். இராமானுஜத்தின் தாயார், தம் தாயார் வாழ்ந்து வந்த காஞ்சிபுரத்தில் திண்ணைப் பள்ளியொன்றில் சேர்த்தார். அங்கு மாணவர்களுடன் பேசிப் பழகியதால் பேச்சு வந்துவிட்டது. இராமானுஜர் நன்கு பேசத் தொடங்கினார்.

1880ஆம் ஆண்டில் இலண்டனிலிருந்து கார் 'என்பவர் பதினைந்தாம் வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கியது போல இராமானுஜமும் சிறந்து விளங்கினார். தான் கண்டுபிடித்த தோற்றங்களையும் எடுகோள்களையும் கேள்வியாகத் தொகுத்து இந்தியக் கணிதக் கழக பத்திரைக்குச் சென்னைத் துறை முகத்தின் தலைமைப் பொறியாளர் ஃபிரான்சிஸ் ஸ்பிரிங் என்பவர் மூலம் அனுப்பினார். பெர்னௌலிலிஸ் எண்கள் எனும் தலைப்பில் வெளியான அவருடைய கட்டுரை கணித வல்லுநர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

டிரினிட்டி கல்லூரியில் ஆராய்ச்சி மாணவராக 18.04.1914 இல் சேர்ந்தார். அவருடைய கணிதத் திறமையைக் கண்டு அவருக்கு ஆண்டொன்றுக்கு அறுபது பவுண்ட் உதவித்தொகை வழங்கப்பட்டது. ஹார்டி சோசரர்ஸ் 'இராமானுஜன் கண்டுபிடிப்புகள்' எனும் தலைப்பில் இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டு அவருக்குப் பெருமை சேர்த்தார்.

இராமானுஜத்தின் திறமையைப் பாராட்டி இங்கிலாந்து பல்கலைக் கழகம் 1918 பிப்ரவரியில் தங்கள் கழகத்தின் உறுப்பினராக்கி எஃப்.ஆர். எஸ். பட்டம் வழங்கியது.

*இராமானுஜத்திற்குக் காசநோய் ஏற்பட்டது. அவரைக் காணவந்த ஹார்டி நான் 1729 எனற் எண் கொண்ட வாடகை மகிழுந்தில் வந்தேன் எனக் கூற, இராமானுஜம் படுக்கையிலிருந்து சட்டென எழுந்து ஹார்டி அவர்களே என்ன இப்படி இயல்பாகக் கூறுகிறீர்கள்? 1729 என்ற எண் இரு வகைகளில் இரு கனங்களில் கூட்டுத் தொகையாக வரும் எண்களில் மிகச்சிறிய எண் அல்லவா? எனக் கேட்டார்.*




*எங்கே அதனை விளக்குங்கள்? என்று ஹார்டி கேட்க,*

$1^3 + 12^3$ *என்றோ*

$10^3 + 9^3$ *என்றோ*

$7 \times 13 \times 19$ *என்றோ*

*பிரிக்கலாமே என உடனடியாகப் பதில் கூறினார். ஹார்டி மிகவும் மகிழ்ந்த அவரது கணிதத் திறனைப் பாராட்டினார்.*


*மூன்று ஆண்டுகளாகத் தீராத காசநோயால் போராடிய இராமானுஜத்தின் உயிர் 26.04.1920ஆம் நாள் பிரிந்தது. அப்போ அவருக்கு வயது 33.*

*கேம்பிரிட்ஜில் ஹார்டியுடன் கூட இருந்த நான்கு ஆண்டுகளும் (1914-1918) இராமானுஜனுக்கு மட்டுமல்ல பேராசிரியர் ஹார்டிக் குமே பொன்னான ஆண்டுகள் தாம். இதை ஹார்டியே சொல்கிறார். பிற்காலத்தில், இராமானுஜன் யாருமே எதிர்பார்க்காத 32 வயதிலேயே மரணமடைந்த பின்னர் ஹார்டி அவரைப் பற்றி சொல்லும்போது “இங்கு வருவதற்கு முன்னால் அவர் என்ன புத்தகம் படித்திருந்தார், இன்னின்ன புத்தகங்களைப் பார்த்திருந்தாரா இல்லையா என்பதை என்னால் சொல்ல முடியவில்லை. நான் கேட்டிருந்தால் ஒருவேளை சொல்லி யிருப்பாரோ என்னமோ. ஆனால், ஒவ்வொருநாள் நான் அவருக்கு காலை வணக்கம் சொல்லும்போதும் அவர் எனக்கு ஐந்தாறு புதுத் தேற்றங்களைக் காட்ட ஆயத்த மாயிருந்ததால் எனக்கு வேறு எதையுமே பேச வாய்ப்பு இல்லை. அதைப் படித்திருக்கிறாயா, இதைப்*

படித்திருக்கிறாயா என்று கேட்பது பொருத்த மில்லாமலிருந்தது”.

இராமானுஜனுடைய படைப்பாற்றல் அவ்வளவு வேகமாக இருந்தது. இருந்தாலும் பேரா. ஹார்டி இராமானுஜனுக்குச் சில தேவையான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தார். காரணம், இராமானுஜன் அவை யில்லாமல் மாற்று வழிகளுக்காக நேரத்தைச் செலவழித்து விடுவாரோ என்ற பயம்தான். ஆனால், ஹார்டியே பின்னால் சொல்கிறார், “நான் அவருக்குத் தெரியவேண்டியவை என்று சொல்லிக் கொடுத்தது சரிதானா என்று தெரியவில்லை. ஏனென்றால் நான் சொல்லிக்கொடுத்ததால் அவருடைய மேதை பரிமளிப்பதைத் தடை செய்திருக்கவும் கூடுமல்லவா?. நான் அவருக்கு சொல்லிக் கொடுத்ததுதான் சரி என்று வைத்துக்கொண்டாலும், ஒன்று மாத்திரம் உண்மை. அவர் என்னிடமிருந்து கற்றதைவிட நான் அவரிடமிருந்து கற்றது தான் அதிகம்”.

ஹார்டியிடம், ‘உலகக் கணித மேதைகளை 100 புள்ளி களைக் கொண்ட அளவுகோலில் அளந்தால் யார், யார் எத்தனை புள்ளிகள் தேறுவர்?’ என்று கேட்டனர். “நான் ஒரு 25 புள்ளிகள் தேறுவேன். லிட்டில்வுட் 30 புள்ளிகள் பெறுவார். டேவிட் ஹில்பர்ட்டுக்கு 80 புள்ளிகள் வழங்கலாம். 100 புள்ளிகள் பெற தகுதியுள்ளவர் இராமானுஜன் மட்டுமே” என்றார்.



இராமானுஜன் 27 ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். அவற்றுள் ஏழு கட்டுரைகள் ஹார்டியுடன் கூட்டாக எழுதியவை.

முனைவர் பி.சி. மஹலனொபிஸ் என்பவர் இராமானுஜன் கேம்பிரிட்ஜில் வசித்த காலத்தில் அவரும் அங்கு படித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் இராமானுஜன் அவரைத் தன் விடுதிக்கு மதிய உணவருந்த அழைத்தார். இராமானுஜன் சமையல் அடுப்பருகில் வேலையில் ஈடுபட்டிருந்ததால், வந்தவர் இருக்கையில் அமர்ந்து ஸ்டிராண்ட் பத்திரிகையைப் புரட்டிக் கொண் டிருந்தார். அதனில் ஒரு கணிதப் புதிர் இருந்தது. அப்பொழுது முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. "பாரிஸ் நகரில் ஒரே தெருவில் இரண்டு வீடுகளில் இரண்டு அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். வீட்டு கதவிலக்கங்கள் தெரியவில்லை. ஆனால், இரண்டு இலக்கங்களினூடே ஒரு கணிதத் தொடர்பு இருக்கிறது, கதவிலக்கங்கள் என்னவாக இருக்கும்?" இதுதான் புதிர்.

சிறிது நேரம் யோசித்ததில் மஹலனோபிஸ்சுக்கு விடை புரிந்து விட்டது. அவர் பரபரப்புடன் அதை இராமானுஜனுடன் பகிர்ந்து கொள்ள விருப்பப் பட்டார். இராமானுஜன் சாம்பாரைக் கலக்கி விட்டுக் கொண்டே, 'சொல்லுங்கள் கேட்போம்' என்றார். மஹலனோபிஸ் கூறினார். அவர் தன் விடையைச் சொல்லுமுன்பே இராமானுஜன், 'சரி, இந்தத் தொடர் பின்னத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்' என்று ஒரு தொடர் பின்னத்தைக் கூறி அதுதான் விடை என்றார்.

கதவிலக்கங்களை x, y என்று கருதி அவைகளுக்குள் இருந்த தொடர்பையும் நாம் இப்படி வைத்துக் கொள்ளலாம்:

$$x^2 - 10y^2 = +1 or -1$$

மஹலனோபிஸ் இதைப் பார்த்ததும் ஓரிரண்டு எண்களைப் பொருத்திப் பார்த்தார். x = 3, y = 1 என்ற விடை கிடைத்தது, கிடைத்தவுடன் இராமானுஜனுக்குச் சொல்லத் தொடங்கிவிட்டார். ஆனால் இராமானுஜன் இச் சிக்கலைக் கேட்டவுடனேயே, சாம்பாரைக் கலக்கிக் கொண்டே, கீழ்வரும் தொடர் பின்னத்தைச் சொன்னார்:

$$3 + \cfrac{1}{6 + \cfrac{1}{6 + \cfrac{1}{6 + \cfrac{1}{6 + \cdots}}}}$$

*இதன் பொருளை இராமானுஜனே விளக்கினார்.*

*இத்தொடர்பின்னத்தின் ஒவ்வொரு ஒருங்கும் ஒவ்வொருவிடையாகும். முதலாவது ஒருங்கு* 3/1. x = 3, y = 1 *என்பது முதல் விடை. இராமானுஜனுடைய் தொடர்பின்னவிடை அந்தத் தெருவில் முடிவில்லாத எண்ணிக்கையில் வீடுகள் இருப்பதாக வைத்துக்கொண்டு, மஹலனொபிஸின் ஒரே விடைக்குப் பதிலாக முடிவுறா எண்ணிக்கையில், தொடர்ந்து பல சரியான விடைகள் கொடுக்கின்றன. இரண்டாவது ஒருங்கு:*

3 + 1/6 = 19/6.

x =19, y = 6 *இது இரண்டாவது விடை.*

$$19^2 - 10 * 6^2 = 361 - 360 = 1$$

*மூன்றாவது ஒருங்கு:*

$$3 + \frac{1}{6 + \frac{1}{6}}$$

இது கொடுக்கும் விடை :

x = 117, y = 37

*இதுவும் சரியான விடைதான்.*

*நான்காவது ஒருங்கு:*

721/228. x = 721 y = 228.

*இப்படியே போகிறது இராமானு ஜனின் தொடர் பின்ன விடை.*

## ஆயுள் (+ or -)

*தினமும் ஒரு மணிநேரம் தொடர்ந்து டி.வி. பார்த்தால் ஒருவரது ஆயளில் 22 நிமிடங்கள் குறைந்துவிடுமாம். அதற்கு மாறாக தினமும் 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தால் அவரது ஆயுள் மூன்று ஆண்டுகள் கூடுமாம்.*

*ஆஸ்திரேலியாவில் உள்ள புகழ் பெற்ற குயின்ஸ் லேண்ட் பல்கலைக்கழகத்தில் மக்கள் தொகை நலன் குறித்தான பள்ளி ஆய்வு மாணவர்கள் 2000ஆம் ஆண்டு 11ஆயிரம் பேரிடம் டி.வி. பார்ப்பது குறித்து ஆய்வு நடத்தினர். இவர்கள் அனைவரும் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்.*

*இந்த ஆய்வின் தொடர்ச்சியாக எட்டு ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் ஆய்வு நடத்தினர்.*

*இந்த ஆய்விலிருந்து அவர்கள் 9.8பில்லியன் மணிநேரம் டி.வி. பார்த்துள்ளதும் அதன் வழியாக இரண்டு லட்சத்து 86ஆயிரம் மணி நேரம் அவர்களது ஆயுள் குறைந்து விட்டதும் தெரிவந்தது.*

*இவ்வாறு ஒருமணிநேரம் டி.வி. பார்த்தால் 22 நிமிடங்கள் ஆயுள் குறைந்துள்ளத கண்டறியப்பட்டது. இது ஒரு மணி நேரத்தில் இரண்டு சிகரட்டுகள் புகைத்தால் ஏற்படும் பின் விளைவிற்கு ஒப்பானது.*

***பா. சிவரஞ்சனி***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## நட்பு

*"உன் நட்பு என்னும்*
*சிறையில் நான் சிக்கிக்கொண்டேன்.*
*தவறுகள் ஏதாவது செய்தால்*
*தண்டித்துவிடு – ஆனால்*
*விடுதலை மட்டும் செய்துவிடாதே"*

***எஸ். நிவேதா***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*

## இமைகள்

*"ஒரு நிமிடம் நம்மைப் பிரித்தும்*
*மறுநிமிடம் நம்மைச் சேர்க்கும்*
*பகலை நான் விரும்புவதில்லை.*
*ஒரு நிமிடம் கூட நாம் பிரியாமல்*
*இருக்க உதவும் இரவையே*
*நான் விரும்புகிறேன்.*

***எஸ். அம்பிகாவதி***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'ஆ' பிரிவு*

## தமிழ்த்தாய்

*"எழுந்ததும் வந்தாள்*
*எனை நோக்கி.*
*நான் நின்ற நிலையோ சிலையாக.*
*வந்தது சிற்பமா? அல்ல.*
*கொண்ட நிலை தெரியாது.*
*வந்த நிலை புரியாது.*
*மெல்லமாய் வினவினேன் அவளை.*
*செல்லமாய்க் குலவினாள்,*
*'நிந்தன் தமிழ்ப்பற்று கண்டு வந்த*
*தங்கத்தமிழ் தாய்' நானென்று!"*

***எஸ். இலக்கியா***
*இளங்கலை கணிதம்முதலாமாண்டு*
*'இ' பிரிவு*

## நட்பு

*"பூமியும் தாயும்*
*வானம் பொழிவதோடு*
*மட்டும் நின்றுவிடுகிறது*
*பூமிதானே விதையை*
*விளைவித்துச் செடியாகிப்*
*பூத்துக் குலுங்கும் போது*
*தாங்கி மகிழ்கிறது*
*அன்னையைப் போல்"*

***எஸ். இலக்கியா***
*இளங்கலை கணிதம்முதலாமாண்டு*
*'இ' பிரிவு*

## என் ஆசிரியர்

"என்னை ஈன்றுபெற்றவர்
என் தாய்.
அன்புகாட்டி வளர்த்தவர்
என் தந்தை.
ஓர் ஆசிரியராக மட்டுமல்லாமல்
ஒரு தாயாகவும்
ஒரு தந்தையாகவும்
ஒரு நண்பனாகவும் என்
வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும்
திகழும் உம்மைப் போற்றுகிறேன்."

**த. உமாதேவி**
இளங்கலை கணிதம் முதலாமாண்டு
'ஆ' பிரிவு

## மொழி

சொற்கள் மூலம் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படும் சாதனமே மொழி. உலகெங்கும் 5000 மொழிகள் பேச்சு வழக்கில் உள்ளன. இந்தியாவில் மட்டும் பேச்சு மொழிகள் உட்பட 845 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் 22 மொழிகள் முதன்மையானவை.

ஒவ்வொரு மொழிக்கும் தனித் தனியான வரிவடிவம் உண்டு. எழுத்துக்களைக் குறிப்பிட்ட வரிசையில் அமைத்தால் சொற்கள் உருவாகின்றன. உலகிலேயே சொல்வளம் மிகுந்த மொழி ஆங்கிலம்தான். இம்மொழியில் 7,90,000 சொற்கள் உள்ளன. இவற்றுள் 3,00,000 கலைச்சொற்களும் அடங்குகின்றன. ஆனால், எந்த ஒரு மனிதனும் வாழ்நாள் முழுதும் தன் எழுத்திலும் பேச்சிலும் முழுவதுமாக 6,00,000 சொற்களுக்குமேல் பயன்படுத்துவதில்லை என்பது மொழியியல் நிபுணர்களின் கருத்து.

உலகெங்கும் 40 கோடி மக்கள் ஆங்கிலம் பேசுகின்றனர். ஆனால், இம்மொழி அதிக அளவில் பேசப்படும் மொழியல்ல. வட சைனாவில் பேசப்படும் மண்டாரின் மொழிதான் 67 கோடியே 50 லட்சம் மக்கள் பேசும் மொழியாக உள்ளது.

ஆங்கிலமொழியில் மிக அதிகமான பொருள்கொண்ட சொல் SET என்பதாகும். இது பெயர்ச்சொல்லாக வரும்போது 58 பொருளிலும் வினைச்சொல்லாக வரும்போது 126 பொருளிலும் உரிச்சொல்லாக வரும்போது 10 பொருளிலும் ஆளப்படுகின்றது.

**எஸ். பிரியங்கா**
இளங்கலை கணிதம் முதலாமாண்டு
'ஆ' பிரிவு

## ஆசிரியர்

*“பல்லாயிரம் குழந்தைகளை*
*வளர்க்கும் தெய்வமே!*
*உம்மையே அர்ப்பணித்து*
*எங்களுக்குக் கற்பிக்கிறாய்.*
*எல்லாத் துன்பத்திலும்*
*எங்களுடன் இருக்கிறாய்.*
*புத்தம் புதியவற்றைக் கற்பித்துத்*
*தாயாகவும்*
*தந்தையாகவும்*
*தெய்வமாகவும் இருந்து*
*எங்களை வழி நடத்திச் செல்லும்*
*உம்மைப் பற்றிச் சொல்ல*
*வேறு வார்த்தைகள் இல்லை*
*எங்களுக்கு.”*

**கா. சுமையா ஃபாத்திமா**
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*‘ஆ’ பிரிவு*

## அன்புத்தூரல்

*“மழையுமில்லை*
*குடையுமில்லை – நான்*
*தினந்தோறும் நனைகிறேன்*
*என் நண்பனின்*
*அன்பு மழையில்..”*

**த. மோனிகா**
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*‘ஆ’ பிரிவு*

## தாய்

*“ஓராயிரம் மாற்றத்தை*
*இன்பமாக ஏற்று*
*முன்னூறுநாட்கள்*
*கருவறையில் சுமந்து*
*பல்லாயிரம் கனவுகள் கண்டு*
*பெற்றெடுத்துப் பேணிக்காத்து*
*வறுமையானாலும் வசதியாக*
*எம்மை வளர்த்து - அழியா*
*அறிவுச் செல்வத்தை வார்த்து*
*உயர்ந்த நற்பண்புகளைப் புகட்டி*
*வாழ்வைப் புரிய வைத்தாய்.*
*இனிவரும் பிறவியில்*
*நான் உன்னைச் சுமக்கவேண்டும்.”*

**ஆ. கீர்த்தனா தேவி**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*‘அ’ பிரிவு*

## கல்வி

*“கண்டதில்லை காட்சிகளை!*
*காணவைத்தாய் கற்பனையாலே.*
*செய்ததில்லை தானங்கள்*
*செய்ய வைத்தாய் உன்*
*மெய்யுணர்வாலே.*
*அறிவு முத்துக்களைக்*
*காட்டிய உனக்கு*
*முத்தாரம் அணிவேன்.”*

**பி. வினிதா**
*இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு*
*‘ஆ’ பிரிவு*

## சுதந்திரம்

*“பரந்து விரிந்த பாரத தேசம்.*
*பரவிக் கிடந்தது மக்கள் நேசம்.*
*ஆங்கிலேயர்கள் நம்மிடம்.*
*காட்டியது வேஷம்.*
*இந்திய தேசத்தையே ஆக்கினர் நாசம்.*
*உறங்கினோம் வருஷங்கள் பல.*
*பாரதத் தாயிடம் பெற்றோம்*
*வீரமிக்க பாசம்.*
*அந்நியருக்கு எதிராக*
*எழுப்பினோம் கோஷம்.*
*விலகியது வெள்ளையனின்*
*அடிமை தோஷம்.*
*பசுமையாய் மலர்ந்தது*
*நம் சுதந்திர தேசம்.”*

***ரா. லோகேஸ்வரன்***
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*‘ஆ’ பிரிவு*

## என்ன செய்வீர்?

*“மழைதரும் மரங்களை வெட்டி,*
*செம்மண் பிசைந்து செங்கல் சுட்டு,*
*ஆற்றுமண் திருடி வீடு கட்டி*
*வாழ்வீர் சுகமாக.*
*மரமின்றி மழையில்லை.*
*மழையின்றி விளைச்சலில்லை.*
*உணவின்றி என்ன செய்வீர்?”*

***வெ. மோகன் குமார்***
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*‘ஆ’ பிரிவு*

## தெரியுமா?

*இரண்டு மொழிகளில் தேசிய கீதம் உள்ள நாடு–* ***செக்கோஸ்லோவியா.***
*இரண்டு தேசிய மொழிகள் உள்ள நாடு –* ***ஆப்கானிஸ்தான்.***
*இரண்டுமறை சுதந்திரம் பெற்ற நாடு –* ***சைப்ரஸ்.***
*இரண்டு தேசிய கீதங்கள் உள்ள நாடு –* ***ஆஸ்திரேலியா.***
*இரு கண்டங்களில் எல்லைகள் உள்ள நாடு –* ***துருக்கி.***

***டி. உமாதேவி***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*‘ஆ’ பிரிவு*

## அழகு

*“வான்கொண்ட நிலவுக்கு*
*மூன்றாம் பிறை*
*மட்டும்தான் அழகு.*
*நான் கொண்ட நட்புக்கு*
*நீ மட்டுமல்ல; உன்*
*நிழல் கூட அழகு.”*

***எம். லோகேஸ்வரி***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*‘இ’ பிரிவு*

## கண்ணீர்

*"நதிகளின் பெயர்கள்*
*அனைத்திலும்*
*பெண்கள் பெயர்.*
*அதனால்தான்*
*பெண்களின் கண்களில் இருந்து*
*நதிபோல் கண்ணீர் வருகிறதோ?."*

**ச. மோகனா**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## கைகள்

*"அம்மாவின் கை அன்போடு*
*அன்னமளிக்கும்.*
*அப்பாவின் கை அறிவோடு*
*பாசமளிக்கும்.*
*அண்ணனின் கை நட்போடு*
*இன்பமளிக்கும்.*
*நண்பரின் கை மனதோடு*
*மகிழ்ச்சியளிக்கும்.*
*ஆசிரியரின் கை அனுபவத்தோடு*
*பண்புமளிக்கும்."*

**லோ. அருண்**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## நான் நேசித்தவை

*"மலர்களை நேசித்தேன்*
*தேன் கிடைத்தது.*
*மரங்களை நேசித்தேன்*
*பழங்கள் கிடைத்தன.*
*புத்தகத்தை நேசித்தேன்*
*தெளிவு கிடைத்தது.*

*காலைப்பொழுதினை நேசித்தேன்*
*அமைதி கிடைத்தது.*
*இரவை நேசித்தேன்*
*நிலவு கிடைத்தது.*
*வானவில்லை நேசித்தேன்*
*நிறங்கள் கிடைத்தன.*

*தாயை நேசித்தேன்*
*அன்பு கிடைத்தது.*
*தந்தையை நேசித்தேன்*
*அறவணைப்பு கிடைத்தது.*
*உன்னை நேசித்தேன்*
*நட்பு கிடைத்தது.*
*நட்பை நேசித்தேன்*
*உலகம் கிடைத்தது.*
*என்னை நேசித்தேன்*
*அமைதி கிடைத்தது."*

**செ. கீர்த்தனா**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## நட்பு

*"ஒரு நாள் நீ*
*என்னிடம் பேசவில்லை.*
*என்ன காரணம் என*
*நான் அறிந்துகொள்ள*
*எனக்கு ஒரு யுகமானது.*
*இனியாவது,*
*காரணத்தைச் சொல்லிவிட்டுப்*
*பேசாமலிரு."*

**ப. தினேஷ்**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## இயற்கைக் கல்வி

*"மலர்ச் சோலைகள்*
*சிவப்புக் காளான்கள்*
*சங்கீத நீரோடைகள்*
*ஈரமணலில் கானுயிர்களின்*
*பாதச்சுவடுகள்*
*இவையெல்லாம்*
*இயற்கைக் கல்வியின்*
*வகுப்பறைகள்."*

**ர. மனோஜ் குமார்.**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## என் தாய்

*"அம்மா நீ என்*
*அருகினில் இல்லை.*
*இருந்தும் என்னுள் நீ.*
*உன் சுமைகளை எனக்குச்*
*சுகமாகக் கொடுத்தாய்.*
*உன் வருத்தங்களிலும்*
*என்னை வளரச்செய்தாய்.*
*உன் துன்பங்களிலும் என்*
*கண்ணீரைத் துடைத்தாய்.*
*உன் வேதனைகளை மறந்து*
*என் சாதனைக்காக உழைத்தாய்.*
*இனிவரும் காலத்தில்*
*நான் தாலாட்டுப் பாடவும்*
*நீ தூளியில் தூங்கவும்*
*நான் உன் தாயாக வேண்டும்."*

**சே. பிரியா.**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## நட்சத்திர மீன்

*"நீரில் மிதக்கும் மீன்கள்*
*இலைகளாய் மாறி*
*வீசும் காற்றிலேறி*
*வானில் மிதந்து*
*கொஞ்ச நாளில்*
*நட்சத்திரங்களாகிவிடுகின்றன."*

**ரா. சத்யா**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## முயற்சி

*"முடியும் வரை அல்ல; நீ*
*நினைத்ததை முடிக்கும் வரை*
*முயற்சிசெய்."*

***மு. இந்துமதி***
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

**ஹைக்கூ**

*'ஆறு கொலை.*
*தடயம் சிக்கியது.*
*மணல் லாரியின் தடம்.'*

***சு. கௌசிகா,***
*இளங்கலை கணிதம் முதலாமாண்டு*
*'இ' பிரிவு*

## தாய்மை

*"அன்னையே உன் கருவறையில்*
*சிலை வடித்தாய்.*
*என் மழலையைக் கவிபெயர்த்தாய்.*
*உன் குருதியை என்*
*இதயத்திற்கு அளித்தாய்.*
*என்னைப் படைத்த உன்*
*இருப்பிடமே*
*நான் வழிபடும் கோவில்.*

***எஸ். மோகன்***
*இளங்கலை கணிதம்*

## நண்பனே!

*"நீ சிரிக்கும் போது*
*நான் உனக்குப் பின்னால்*
*இருப்பேன் - உன்*
*வெற்றியைக் கொண்டாட.*
*நீ அழும் போது*
*நான் உனக்கு முன்னால் இருப்பேன்*
*உன் கண்ணீரைத் துடைக்க.*

***மு. இந்துமதி***
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## தத்துவம்

*அன்பு என்பதையும்*
*ஆசை என்பதையும் கொண்டது*
*காதல்.*
*இன்மை என்பதையும்*
*ஈகோ இன்மையையும் உடையது*
*நட்பு.*
*உண்மை என்பதையும்*
*ஊடல் என்பதையும் கொண்டது*
*திருமணம்.*
*எளிமை என்பதையும்*
*ஏமாற்றம் என்பதையும் கொண்டது*
*வறுமை.*

***ப. சுதா பிரியா***
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## தமிழ்

"தமிழா!
தமிழைத் தாய் என்றாய்.
தாயை முதியோர் இல்லத்தில்
சேர்ப்பது போலத் தமிழையும்
ஆங்கிலச் சிறையில்
அடைத்துவிடாதே!"

**அ. தேன்மொழி**
இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு
'அ' பிரிவு

## நட்பு

"அறிமுகம் இல்லாமல் பழகி
நட்பாகி இணைந்திருந்தோம்.
இன்று பிரிகின்றோம்.
நம் நட்பு தந்த நினைவுகளை
நம் இதயங்களில் தாங்கியிருப்போம்
அடுத்த சந்திப்புக்குக் காத்திருப்போம்."

**சே. ஜீவிதா**
இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு
'அ' பிரிவு

## குறுங்கவிதை

"பள்ளி ஆற்றினைக் கடந்து.
கல்லூரிக் கடலில் நீந்தி.
வாழ்க்கைக் கரையினை ஏறு."

**ரா. சங்கீதா**
இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு
'அ' பிரிவு

## வாழ்க்கை

"என்னைச் சுமந்த பூமி
நான் சுமந்த ஆசைகள்
கண்கள் சுமந்த கற்பனைகள்
எனக்குப் பிடித்த இடங்கள்
நான் விரும்பிய நிமிடங்கள்
காற்றோடு மிதக்கும் என் சுவாசம்
எல்லாம் சுகம்தான்.
ஆனால்,
நான் மட்டும் சுகமில்லாமல்
என் கடைசி நிமிடங்களில்
தவிக்கிறேன்.
என்னோடு எடுத்துச்செல்ல
ஏதாவது இருக்கிறதா? என்று
தேடுகிறேன்.
புரியாத வார்த்தைகளும்
கலையாத நினைவுகளும்
ஏனோ வாதாடுகின்றன.
என்னோடு வர மறுக்கின்றன.
அதற்காக
எடுத்துச் செல்ல ஒன்றுமில்லை
என்று எண்ணவேண்டாம்.
வாழ்க்கையை அனுபவித்து
வாழ்ந்திருந்தால்
எடுத்துச்செல்லலாம்
நம்மோடு நம்
அனுபவங்களை!"

**பி. சுகன்யா**
இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு
'அ' பிரிவு

## கண்ணகி

*"கயல்விழிக் கண்கொண்டு*
*மனத்தினில் கனிவுகொண்டு*
*கண்களில் சினம் கொண்டு*
*நீ பார்த்த ஒரு பார்வை*
*நெருப்பினைக் கக்கி விட்டதோ*
*மதுரையும் எரிந்துவிட்டதோ*
*நீதி வேண்டி மதுரையை*
*எரித்த மல்லிகையே!*
*நித்தமும் உன்னை*
*வணங்குகிறேன் தாயே."*

**பி. சுகன்யா**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## இயற்கை

*"எந்தப் பிரதேசத்தில்*
*மூடுபனித் தென்றலை*
*மூச்சுமுட்டச்*
*சுவாசிக்க முடிகிறதோ.*
*எந்த மண்ணில்*
*பூக்களெல்லாம் புதுக்கவிதை*
*சொல்லுகின்றனவோ*
*எந்தப் புல்வெளிப் பிரதேசத்தில்*
*பள்ளத்தாக்குகளெல்லாம்*
*கவியூற்றுக் கண்களாய்*
*மாறியிருக்கின்றனவோ*
*எந்த மலைகளில்*
*முணுமுணுக்கும் நீரோடைகளில்*
*கவிதை நனைந்திருக்கிறதோ*
*எந்த மலைச்சாரலில்*
*மௌனம் நேசிக்கப்பட்டு*
*நமது ஞாபகங்களுக்குச்*
*சிறகு கட்டப்படுகிறதோ*
*அங்கெல்லாம்*
*இயற்கையில் வசிக்க*
*இயற்கையை வாசிக்க*
*இயற்கை பாதுகாக்கப்பட*
*வேண்டுமென்ற*
*உலராத எண்ணத்தை*
*இதயத்தில் உற்பத்தி*
*செய்துகொள்ள*
*இயற்கை முகாம் செல்கிறோம்."*

**க. சசி**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## பொய்

*"பிறர் மனம் மகிழ*
*இவ் உலகத்திடம்*
*பொய்யாகப்*
*புன்னகைக்கின்றேன்.*
*உன் புன்னகையின்*
*வேதனையினை*
*நான் அறிந்தும்*
*உன் மனம் மகிழ*
*நானும் பொய்யாகவே*
*புன்னகை புரிகிறேன்."*

**த. புவனேஷ்வரி**
*இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு*
*'அ' பிரிவு*

## கல்விச் சுற்றுலா

தமிழ்த்துறை மாணாக்கர்கள் 55 பேர் ஒருநாள் கல்விச் சுற்றுலா சென்றுவந்தனர்.

23.08.2013 அன்று இரவு பத்து மணிக்குக் கல்லூரியிலிருந்து புறப்பட்டு அதிகாலை தஞ்சாவூர் சென்றனர். காலை 8.00மணியளவில் தஞ்சைப் பெரிய கோவியிலைக் கண்டு களித்தனர். அக் கோவிலிலுள்ள கல்வெட்டுக்கள் பற்றி அறிந்துகொள்ள அவர்களுக்குத் தஞ்சைப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறையின் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் **திரு. சந்தானம்** மற்றும் **திரு. அருண்குமார்** ஆகியோர் வழிகாட்டுநர்களாக இருந்து உதவினர்.

பின்னர் அங்கிருந்து அரசு அருங் காட்சியகத்திற்குச் சென்று, பழம் பொருட்கள் பலவற்றைக் கண்டு வியந்தனர். தஞ்சைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை உதவிப் பேராசிரியரும் அருங்காட்சியகப் பொறுப்பாளருமான முனைவர் **துளசேந்திரன்** அவர்கள் மாணாக்கர் களுக்கு அப் பழம்பொருட்களின் வரலாற்றினை எடுத்துக் கூறினார்.

பிற்பகலில் மாணாக்கர்கள் தாராசுரம் கோவிலினைச் சுற்றிப் பார்த்தனர். பின்னர் திருச்சி வந்து கல்லணையினையில் உலாவினர். இரவு எட்டுமணியளவில் கல்லூரிக்கு வந்தனர்.



## விடியலின் வாழ்த்து

*ஸ்ரீராம் இலக்கியக் கழகம் நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் சேலம் மண்டலப் பிரிவில் நம் கல்லூரி* ***வேதியியல் துறை மூன்றாமாண்டு மாணவி செல்வி வே. பூங்கொடி*** *மூன்றாமிடம் பெற்றுள்ளார். அவரை விடியல் வாழ்த்துகிறது.*

## தமிழ்த்துறை நிகழ்வுகள்

### பட்டிமன்றம்

*21.08.2013 அன்று மாலை 3மணிமுதல் 4.20வரை கருத்தரங்க அறையில்* ***மாணவர்களின் முன்னேற்றத் திற்குப் பெரிதும் காரணமானவர்கள் பெற்றோர்களா? ஆசிரியர்களா?*** *என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.*

***பெற்றோர்களே!*** *என்ற அணி யில் மூன்றாமாண்டு வேதியியல் துறை மாணவி வே. பூங்கொடி, மூன்றாமாண்டு உயிர்த்தொழில்நுட்பத் துறை மாணவர் ர. கௌதம், முதலாண்டு வணிகவியல் துறை மாணவி நா. சுதா, மூன்றாமாண்டு உயிர்த்தொழில்நுட்பத் துறை மாணவி மு. நரேன்குமார் ஆகியோரும் சிறப்பாக வாதிட்டனர்.*

***ஆசிரியர்களே!*** *என்ற அணி யில் மூன்றாமாண்டு வணிகவியல் துறை ஆ பிரிவு மாணவி ப. விஜய சந்திரிகா, முதலாண்டு தமிழ்த் துறை மாணவி செ. உதயசங்கரி, முதலாண்டு ஆங்கிலத் துறை மாணவி ரா. அனுஜா, இரண்டா மாண்டு தமிழ்த்துறை மாணவி இ. மதுபாலா ஆகியோரும் சிறப்பாக வாதிட்டனர்.*

*நடுவராகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. கார்த்திகேயன் அவர்கள்* ***மாணவர் களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் காரணமானவர்கள் ஆசிரியர்களே*** *என்ற தீர்ப்பினை நல்க, பட்டிமன்றம் இனிதே நிறைவேறியது.*

## கவிதைப் பயிலரங்கம்

*22.08.2013 அன்று மாலை 3மணிமுதல் 4.00வரை கருத்தரங்க அறையில் மாணவர்களின் கவிதை எழுதும் திறனை வளர்க்கும் பொருட்டு கவிதைப் பயிலரங்கம் நடைபெற்றது.*

*கவிதைப் பயிற்றுநர்களாகத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்* ***முனைவர் க. பாலாஜி*** *அவர்களும் வேலைவாய்ப்பு அலுவலர்* ***திரு. இராஜேஷ்*** *அவர்களும் ஆங்கிலத் துறை உதவிப்பேராசிரியர்* ***திரு. பூபதி*** *அவர்களும் தாங்கள் கவிதை எழுதிய அனுபவங்களை மாணவர் களுடன் பகிர்ந்துகொண்டனர்.*

## *கவியரங்கம்*

*27.08.2013 அன்று மாலை 3மணிமுதல் 4.00வரை கருத்தரங்க அறையில் மாணவர்களின் கவியரங்கம் நடைபெற்றது.*

*சுதந்திரதின விழாச் சிறப்புக் கவியரங்கமாக நடைபெற்ற இதில் பத்து மாணாக்கர்கள் பங்கேற்று கவிதை வாசித்தனர்.*

*இவ் இளங்கவிஞர்களுக்குத் தமிழ் உதவிப்பேராசிரியர் **முனைவர் பெ. கணேச முருகன்** அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கிச் சிறப்பித்தார்.*

## *அறிவிப்புகள்*

## *தமிழ் இலக்கியக் கலை விழா*

*07.09.2013 அன்று காலை 10.00மணிமுதல் 12.00 மணிவரை கல்லூரி வெள்ளிவிழா அரங்கில் தமிழ் இலக்கியக் கலை விழா நடைபெற உள்ளது.*

*சிறப்பு விருந்தினராகத் **திரு. பாஸ்கர் சக்தி** அவர்கள் வருகைதந்து சிறப்புரை நல்க உள்ளார்.*

## *சிறப்புச் சொற்பொழிவு*

*11.09.2013 அன்று காலை 10.00மணிமுதல் 12.00 மணிவரை கல்லூரி வெள்ளிவிழா அரங்கில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற உள்ளது.*

*சிறப்பு விருந்தினராகத் **திரு. ஸ்டாலின் குணசேகரன்** அவர்கள் வருகைதந்து சிறப்புரை நல்க உள்ளார்.*

## தேசியக் கருத்தரங்கம்

*கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை, பட்டாசு நகர் அரிமா சங்கத்துடன் (சிவகாசி) இணைந்து "பல்துறை நோக்கில் கண்கள்" என்ற பொருண்மையில் ஒருநாள் தேசியக் கருத்தரங்கினை நடத்த உள்ளது.*

*பேராளர்கள் கட்டணம்: 400.00,*
*ஆய்வாளர்கள் கட்டணம்: 250.00.*
*கட்டுரைகளைப் பெறும் இறுதி நாள்: **10.09.2013***

***தொடர்புக்கு:***

*முனைவர் மா. கார்த்திகேயன்,*
*தமிழ்த்துறைத்தலைவர்,*
***9894953535.***

*முனைவர் பெ. கணேசமுருகன்,*
*தமிழ் உதவிப்பேராசிரியர்,*
***9786358617.***

*தமிழ்த்துறை நடத்தும் **பொன் மாலைப் பொழுது** நிகழ்ச்சி வாரந்தோறும் செவ்வாய் மற்றும் வியாழன் கிழமைகளில் மாலை 4.05 மணி முதல் 4.30 மணிவரை கல்லூரிப் புல்வெளி அரங்கில் நடை பெறும்.*